ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1840/33 - 2013 දෙසැම්බර් මස 11 වැනි බදාදා - 2013.12.11

*1840/33 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் வென்னப்புவ பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

வடமேல் மாகாணசபைக்குத் தெரிவாகியதன் காரணமாக, வென்னப்புவ பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

வென்னப்புவ பிரதேச சபையின் துணைத் தவிசாளர் ட்ரெவின் பர்னாந்து எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான வென்னப்புவ பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டார் ஆதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட திரு. அனுருத்த கச்சகடுகே நாமல் சிறிவர்தன பர்னாந்து என்பவரை பெயர் குறித்து தனது தீர்மானத்தை அறிவித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது வென்னப்புவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஜயசிங்க ஆரச்சில்லாகே சமந்த பிரியலீல் ஜயசிங்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. அனுருத்த கச்சகடுகே நாமல் சிறிவர்தன பர்னாந்து என்பவர், வென்னப்புவ பிரதேச சபையின் துணைத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

ஜே. ஏ. எஸ். பி. ஜயசிங்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வென்னப்புவ பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
புத்தளம்,
*2013, நவெம்பர் 29.*

*12- 1112*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் நாத்தாண்டிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

வட மேல் மாகாண சபைக்குத் தெரிவாகியதன் காரணமாக, நாத்தாண்டிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

நாத்தாண்டிய பிரதேச சபையின் உறுப்பினர் திரு. அசோக பிரியந்த ரணபட்டி தேவகே எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான நாத்தண்டிய பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படிக் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டார் ஆதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகை வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகைமை பெற்றவரொருவரான திரு. ஹேரத் பதிரன்னெஹெலாகே அதுல பிரியந்த ஹேரத் என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது நாத்தாண்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஜயசிங்க ஆரச்சில்லாகே சமந்த பிரியலீல் ஜயசிங்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஹேரத் பதிரன்னெஹெலாகே அதுல பிரியந்த ஹேரத் என்பவர், நாத்தாண்டிய பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

ஜே. ஏ. எஸ். பி. ஜயசிங்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
நாத்தாண்டிய பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
புத்தளம்,
2013, நவெம்பர் 29.

12- 1113

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.